# 31ம் நினைவு மலர்



குருக்கள்மடத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர்.
## மயில்வாகனம் கலாநிதி

அவர்களின் 31ம் நாள் நினைவு மலர்

## 20.02.2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# அமரர். மயில்வாகனம் கலாநிதி.

(ஆசிரியர்)

## அவர்களின் 31 ம் நாள் நினைவு மலர்



மலர்வு
12.12.1966

உதிர்வு
21.01.2010

### திதி வெண்பா

விரோதி வருட தைத்திங்கள் 21ம் நாளதனில்
பூர்வபக்க சதுர்த்தி திதியில் - பூதவுடல் நீத்து
புகழுடைமை கலாநிதி பெற்று
சிவபதம் அதனில் சேர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

அன்பின் பிறப்பிடமாகவும், பாதசத்தின்
உறைவிடமாகவும் தன்னை அர்ப்பணித்து
எங்களை வாழவைத்து, என்றும் எங்களோடு
இதயம் கலந்து உறவாடி, எங்களை வழிநடத்தி,
என்றுமே நல்லவற்றையே நினைத்து,
நல்லதையே செய்து, நீதி தவறாமல் வாழ்ந்து,
எமது வாழ்வின் முழுமைக்கு வித்தாக நின்று,
குடும்ப தெய்வச் சுடராக பிரகாசித்து
எம்மையெல்லாம் ஆற்றொண்ணா துயரில் ஆழ்த்தி
21.01.2010 அன்று இறைபதமடைந்த
எமது அன்பு தெய்வத்தின் 31ம் நாள் நினைவாக
இம் மலரை சமர்ப்பிக்கின்றோம்

இவ்வண்ணம்,
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். மயில்வாகனம் கலாநிதி
## அவர்களின்
## வாழ்வுச் சரிதம்

மீன்பாடும் மட்டுமாநகரிலே தென் திசையில் செந்தமிழும் சைவமும் சிறந்தோங்கும் குருக்கள்மடம் எனும் கிராமத்தில் ஆறுமுகம் மாணிக்கப்பிள்ளை தம்பதியினரின் மகன் மயில்வாகனத்திற்கும், முருகேசு செல்லம்மா தம்பதியினரின் மகள் மனோன்மணிக்கும் 1966.12.12ம் திகதி உதித்த முதலாவது செல்வப்புதல்வனே அமரர். கலாநிதி ஆவார். இவர் கருணாநிதி ( சனசமூக உத்தியோகஸ்தர், உள்ளூராட்சித் திணைக்களம், கல்லடி ), ரஜனி தேவி ( பதவி நிலை இணைப்பாளர் இ.மி.ச கல்லடி ), ராதிகா தேவி ( நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், வலயக் கல்வி அலுவலகம், களுவாஞ்சிக்குடி ) ஆகிய மூவரையும் அன்புச் சகோதரர்களாக கொண்டு வாழ்ந்தார்.

இவர் தனது சிறு வயதிலேயே தனது தந்தையினை இழந்தவராவார். குடும்பப் பொறுப்புக்களையெல்லாம் தானே ஏற்று குடும்பத்துக்கு தலைவனாக தனது சகோதரர்களை எல்லாம் நல்ல முறையில் வழிநடத்தியவர் ஆவார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியினை மட்/குருக்கள்மடம் கலைவாணி மகாவித்தியாலத்தில் ஆரம்பித்து, உயர் கல்வியினையும் இவ்வித்தியாலய த்திலேயே முடித்தார். இவர் 1990.03.15ம் திகதி பயிலுனர் ஆசிரியராக முதல் நியமனம் பெற்று களுவாஞ்சிக்குடி விநாயகர் வித்தியாலயத்தில் மாணவர்களுக்கு பாடம் புகட்டி வரும் வேளையிலே கதிரவேற்பிள்ளை பரஞ்சோதி தம்பதியினரின் மகள் சசிலேகாவைத் தனது இல்லத்தரசியாக மணந்து கொண்டார். இல்லறத்தை நல்லறமாக நடத்தி ஆஸ்திக்கு மகள் வஜிதாவையும் ஆசைக்கு மகன் மதுசனனையும் குலக் கொழுந்துகளாய் ஈன்றெடுத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிலுனர் ஆசிரியராகக் கடமை ஆற்றிய போதும் தனது படிப்பினை இடை நிறுத்தாமல் தனது முயற்சியினால் பட்டப்படிப்பினை முடித்து 1993.06.01இல் பட்டதாரி ஆசிரியர் நியமனத்தைப் பெற்ற இவர் தொடர்ந்து 1998.03.01ஆம் திகதி பட்டப்பின் டிப்ளோமா பட்டத்தினைப் பெற்றார். இவ்வாறு வாழ்ந்து கொண்டிருக்கும் வேளையிலே கல்வி புகட்ட, கலையை வளர்க்க மட்/களுவாஞ்சிக்குடி விநாயகர் வித்தியாலயம், மட்/மகிளூர்முனை வித்தியாலயம், மட்/மகிளூர் சரஸ்வதி மகாவித்தியாலயம், மட்/ தேற்றாத்தீவு சிவகலை வித்தியாலயம், மட்/கோட்டைக்கல்லாறு மகாவித்தியாலயம், ஆகிய பாடசாலைகளில் கடமை, கண்ணியம், கட்டுப்பாடுகளுடன் சேவை செய்த சிறப்புமிக்க ஆசிரியர் ஆவார்.

அமரர். கலாநிதி தனது படிப்பினை பட்டப்பின் டிப்ளோமா பட்டத்துடன் நிறுத்தி விடாமல் மேற்படிப்பு படிக்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் பிரித்தானியா செல்வதற்கு தயாராகிக் கொண்டிருந்த வேளையில் எதுவித பாதிக்கப்படாதிருந்த இவர் 2010.01.21ம் திகதி வியாழக்கிழமை இரவு தனது இராப்போசனத்தை முடித்து விட்டு நித்திரைக்குப் போன வேளையில் மாரடைப்பினால் குடும்பத்திற்கு எதுவித கஷ்டத்தினையும் கொடுக்காமல் அவரது ஆத்மா இறைவனடி சேர்ந்து விட்டது.

சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

❀ மற்றவர்களுக்காக காத்திருக்கும் பழக்கம் உங்களுக்கிருந்தால் நீங்கள் பின்தங்கி விடுவீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலுமெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

## பஞ்சபுராணம் ( வியாழக்கிழமைக்குரியது )

### தேவாரம்

தம்மையே புகழ்ந்திச்சை பேசினும்
சார்வினும் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மையாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்!
இம்மையே தரும் சோறும் கூறையும்
ஏத்தலாம் இடர் கெடலுமாம்
அம்மையே சிவலோக மாள்வதற்கு
யாதும் ஐயுற வில்லையே!

### திருவாசகம்

அன்றே எந்தன் ஆவியும் உடலும்
உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட்கொண்ட
போதே கொண்டிலையோ
இன்றோ ரிடையூறெனக் குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செவ்வாய் பிழை செய்யாய்
நானோ இதற்கு நாயகமே!

### திருவிசைப்பா

தந்தையங் கனையார் தங்கள் மேல்வைத்த
தயாவைநூ றாயிரம் கூறிட்டு
அத்திலங், கொருகூறு உன் கண் வைத்தவருக்கு
அமருல களிக்கும் நின்பெருமை
பித்தனென்றொருகால் பேசுவரேனும்
பிழைத்தவை பொறுத்தருள் செய்யும்
கைத்தல் அடியேன் சென்னிவைத்த கங்கை
கொண்ட சோ ளேச்சரத்தானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

தாதையைத் தாள் அற வீசிய
சண்டிக்கு அவ்வண்டத்தொடும் உடனே
பூதலத்தோரும் வணங்கப் பொற்
கோயிலும் போனகமும் அருளிச்
சோதி மணிமுடித் தாமமும்
நாமமும் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத்துக்குப் பரிசு வைத்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## 5. பெரியபுராணம்

ஞானத்தின் திருவுருவை, நான்மறையின் தனித்துணியை
வானத்தின் மிசையன்றி மண்ணில் வளர் மதிக்கொழுந்தைத்
தேன் நக்க மலர்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்
திருச்சிற்றம்பலம்

## திருப்புகழ்

வேனில் பதனைந்து பானம் விட நொந்து
வீதி தோறும் நின்ற மட மார்பா
வேளையின வந்து தாளினில் வீழ்ந்து
வேட கட அன்பு பல பேசி
தேனினும் மனந்த வாயமுதம் உண்டு
நீர் தல தளங்களில் டுழ்கி
தேடிபே தளங்கள் வாயடு தம் உணர
கீழ் தள தளங்களில் டுழ்கி

ஆனிரை புனரந்து மானியம் அளந்த
ஆலிலையில் அன்று துயில் மாயன்!
ஆயர் மனை சென்று, பால் தயிர் அழைத்த
ஆரணர் முகுந்தன் மரு கோனே!
வானவர் புகழ்ந்து கானவள் பயன்த
மானோடு விளங்கு மணி மார்பா
மாமலை டுழங்கு சீர் புருட மங்கை
மாநகர் அமர்ந்த பெருமானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கற்பா!

## அம்மாவின் துயரம்

மகனே மூத்த மகனே முதல்வா
அகத்தில் ஆசை வளர்த்த அற்புதா
புத்திகள் சொல்வாயே புதல்வா
மதி கெட்டுப் போனதென்ன மகனே
பாதி நடுவில் பறந்து போனாயே
சாதி சந்தானம் சரிந்து நிற்குதைய்யா
எங்கெங்கு பார்த்தாலும் உன் முகம் தோணுதைய்யா
இங்கே நான் படும் துயரம் எப்பிறப்பில் ஆறும் மகனே
உருவத்தில் உத்தமன் நீ பருவத்தில் பருமன் நீ
அரும்பெரும் பணி செய்த அன்பு மகனே
கருகிப் போனாயே கண்முன் மகனே
அழுகின்றேன் அழமுடியவில்லை என் ஆசை மகனே!

## மனைவி துயரம்

காலமெல்லாம் வாழ கலியாணம் செய்தேனே
ஆல மரம் போல் அமர்ந்திருந்தாயே
தான தர்மம் வழங்கிய என் தலைவா
சனங்களோடு சகசமாக பழகிய சரித்திர நாயகனே
இரு பிள்ளைகளையும் இரு கண்களாக பார்த்த தலைவா
இடைநடுவிலே இறைவன் எடுத்ததென்ன
பிள்ளைகளோடு பித்துப்பிடித்து நிற்கின்றேன்
எதையும் பெரிதாக எண்ணமாட்டீர்
அத்தனையும் அழியும் செல்வம் என்பீர்
காலமெல்லாம் களிப்புடன் வாழ்ந்தோமே கணவா
கணப் பொழுதில் கண் மூடியதுதானே கலக்கம்
பொறுப்பெதுவும் தெரியாமல் பொறுப்போடு எமைக்காத்து
இடியெந்தன் தலையில் விழ ஏன்
ஐயா எனைப் பிரிந்தீர்
என் மனதை விட்டகலாதைய்யா ஏக்கம்
வாழும் வரை வளர்ப்பேன் உங்கள் நாமம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைகளின் துயரம்

உயிருக்கு உயிரான உத்தமரே எம் அப்பா
விழிகளெல்லாம் நீர் நிறைக்க விண்ணுலகம் போய் விட்டீர்
அப்படியென்ன குற்றம் செய்தோம் அப்பா நாங்கள்
சொல்லாது எங்கு சென்றீர்? வருவீரா துடிக்கின்றோம்
துன்பங்கள் எமைச் சூழ்ந்தால் துடிதுடித்துப் போவீரே!
கண்ணை இமை காப்பது போல் காலமெல்லாம் காத்தீரே
வாவா, தம்பி என்று அழைப்பீரே நித்தமும்
அழையாது எங்கு சென்றீர்? தவிக்கின்றோம் அப்பா
கேட்டதை தருவீரே கேட்டவுடன் அப்பா
தட்டிக் கழிக்க மாட்டீரே தங்கமான அப்பா
பட்டம் பெற வேண்டுமென்று சொல்வீரே பாரினிலே
கட்டியணைத்து வாழ வைத்த காவலனே எம் அப்பா
தேவபதம் அடைந்த தெய்வம் நீர் அப்பா
நாங்கள் உய்யவழி காட்டுமப்பா உம் நினைவே துணை எமக்கு
சிலையாகிப் போனோம் செய்வதறியாது
செயலாக நீ இருந்து செய்விப்பாய் அப்பா

## சகோதரங்களின் குமுறல்

மயில் போன்ற வாகனமே மயில்வாகனம்
துயில் எழுப்பி வளர்த்த சுடர் ஒளியின்
மூத்த மகனாக தோன்றிய உனக்கு
மூச்சுப் போன மர்மம் என்ன அண்ணா!
கூடிப் பிறப்பதற்கு கொடுத்து வைத்த நாமின்று
கூடி அழுகின்றோம் அன்பண்ணா வருவாயா?
பிரிவொன்றும் வராமல் பிரியமாய் வாழ்ந்திருந்தோம்
இறைவனடி தேடியோட என்ன குறை நாம் செய்தோம்?
அகத்தில் அகலாதண்ணா உந்தன் அன்பு
யுகம் எத்தனை வந்தாலும் உன் முகம் மறையாது
அண்ணாவே அழுது புரளுகின்றோம் அகிலம்
தன்னளி கொண்டு தவியாய் தவிக்கின்றோம்
மண்ணுலகில் வாழ்ந்த காலம்
மனதை விட்டு அகல வில்லை
விண்ணுலகம் சென்று விட்டாலும்
இம் மண்ணுலகில் நாங்கள் உங்கள் நினைவிலே இருப்போமண்ணா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரத்துவமடைந்த என் இனிய மைத்துனருக்கு
## எனது அஞ்சலிகள்

மூத்ததனால் முந்தினியோ மைத்துனா
காப்பவனும் காக்கவில்லை
பார்த்தவரும் நினைக்கவில்லை
மூத்ததனால் முந்தினாயோ மைத்துனா

வார்த்தைகளால் வெல்லுவதும்
வாழ வழி சொல்லுவதும்
பார்த்தவருடன் பழகுவதும்
பகைவரேனும் புகழுவதும்

நேர்வழியில் செல்லுவதும்
நெறிப்படுத்தி நில்லுவதும்
முறைப்படி முயலுவதும் இவையில்
மூத்ததனால் முந்தினாயோ மைத்துனா

உன் வழியில் நேராயும்
கீழ் உறவுகளுக்கு வேராயும்
முன்வழியில் நின்றிட்டாய்
முடியாத தூரம் சென்றிட்டாய்

வதங்கின கண்கள் வதனம் தேட
கசங்கிய நெஞ்சும் உன் நினைவைப்பாட
முடங்கிய மனதுடன் உன் தடம் தேடி
முனைகிறோம் இங்கு உறவுகள் கூடி

இறைவன் வெறுப்பினால் உன்னை
அழைத்திட வில்லை விருப்பினாலன்றோ
இருக்கிறவரைக்கும் நினைகின்றோம் நாளும்
இறுதியில் வருவோம் உன்னுடன் நாமும்.

S. ஜோதிநேசன்
குருக்கள்மடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரியமுள்ள என் பெரியப்பாவுக்கு

செந்தமிழும் சைவமும்
சிறந்தோங்கும் குருக்கள்மடப்
பேருனரின் பெருமகனே பெரியப்பா
பிரிவுச் செய்தி கேட்டு பேரதிர்ச்சி அடைந்தேனே

செல்லமாய் எனை அழைக்கும்
சிகரமே ஏன் சரிந்தாய் ~ அந்த
பொல்லாத காலனுக்கு
பொறுக்கவில்லையோ நீ மறைந்தாய்

"கிவாஞ்சன்" எனைக் கண்டால்
கொள்ளை இன்பம் உந்தனுக்கு
தந்தை போல் என்னை
தடவி நின்ற பெரும் பேறே பெரியப்பா!

பெரியப்பா நீங்கள் எங்கே
பாடையிலே சென்ற பயணம் ~ இந்த
பாலகனை பதைக்கவிட்டு
மரணித்த தென்ன மர்மம்

கல்வியாசான் பெரியப்பா
கண்களெல்லாம் நீர் சொரிய
மீளாப் பயணம் நீசென்ற
மரணத்தை மறக்கலாமோ

எந்தன் பிஞ்சு உள்ளம்
என்னவோ எல்லாம் நினைக்கிறது
உந்தன் அன்பு உருவம் ~ என்
உள்ளத்தை நனைக்கிறது

சொந்தமே இரத்த உறவுப் பெருமகனே
தலைவிதியோ இவ்வயதில் சாவதற்கு
பெரியப்பா "கலாநிதியே" கடவுளடி சேர்ந்து விடு

உன் இழப்பால் துயருறும்
அன்பு மகன்
கிவாஞ்சன்
கருணாநிதி தம்பதிகள்
குருக்கள்மடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறகொடிந்த சிட்டுக்குருவி.....!

பால் மணம் மாறாத
பச்சிளம் பாலகியாய்
பாரினிலே நானிருக்க – மாமா நீ
பரகதி அடைந்த சேதி
பாரெங்கும் ஒலித்திட
தாயிழந்த கன்றுபோல்
தாய் மாமா உனையிழந்து
தவிக்கின்றேன் வேதனையில்

மழலை மொழியாலே மாமா
உனை அழைத்தால்
ஆயிரம் முத்தங்கள் அள்ளி – நீ
பரிசாகக் கொடுப்பாயே
ஆயுள் முழுவதும் இனி யாரை
பெரிய மாமா என்று நானழைப்பேன்
உன் அரவணைப்பின்றி – மாமா
அநாதையாய் அழுகின்றேன்
மனம் குளிர மாமா நீ – சஸ்வினா என
மலர் வாயால் சொல்வாயே!
மாசற்ற குணத்தவனே
மல்லிகை நிறத்தவனே
நெஞ்சு பதைக்கின்றது
கொஞ்சி உனை அழும் போது – இன்று
உன் புன்னகையில்லா தேசத்தில்
சிறகொடிந்த சிட்டுக்குருவியாய்
உன் மருமகள்......

அன்பு மருமகள்
J. சஸ்வினா

❁ கவனக் குறைவினால் பிழைகள் ஏற்படுகின்றன.
பின்னர் மன உளைவு ஏற்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதவும் உள்ளம் கொண்ட உத்தமன்
## அமரர். மயில்வாகனம் – கலாநிதி.

சீர்பெருகும் குருக்கள்மடம்தனில் குழந்தையாய்
மயில்வாகனம் – மனோன்மணி தம்பதிக்கு தலைமகனாய்,
அவதரித்த கலாநிதி எனும் காவிய நாயகனே!
நாற்பத்தி மூன்றாண்டு நலமுடனும், சுகமுடனும், வளமுடனும்
படித்து பட்டம் பெற்று, மாசற்ற ஆசானாய் நற்பணியே செய்து,
மனைவியாக சசிலேகாவைக் கரம் பிடித்து மங்களகரமாய்,
இல்லறம் தனையே இனிதாய் நடாத்தியே, – ஆஸ்திக்கு
மகள் வஜிதாவையும், ஆசைக்கு – மகன்
மதுசனனையும் குலக்கொழுந்துகளாய் ஈன்றெடுத்து,
ஏற்றமுடனே வாழ்ந்தாயே கலாநிதியே!
எவருக்கும் உதவி புரியும் உயர்ந்த உள்ளம் உன்னிடத்தில்
உள்ளதை நாமறிவோம் கலாநிதியே!
நாற்பத்தி மூன்றாண்டு நற்பண்பாளனாய் – குருக்கள் மடத்திற்கே
நற்தொண்டனாய் தொண்டாற்றி தை மாதம்
இருபத்தோராம் நாள் ஈராயிரத்து பத்தில் – உன் பணிப்பயணம்
இடை நடுவே நின்றதேனோ? வான் புகழ வாழ்ந்த கலாநிதியே!
உன் இழப்பு எமக்கு பேரிழப்பாய் இருந்தாலும் – உன்
பணியும், புன்னகையும் இன்னும் எங்களை விட்டகலவில்லையே!
கொழுந்துவிட்டெரிந்த தீயினிலே! குழந்தை மகனின் கரத்தால் – உம்
சிரத்தினிலே தீ வைத்த போது கல் நெஞ்சம் கூட கதி கலங்கி,
கண்ணீர் விட்டதையா?
கடவுள் படைத்த உயிர் படைப்பிற்கு, பிறப்பென்பதும் இறப்பென்பதும்
நிச்சயிக்கப்பட்டிருந்தாலும் – நீ
இடை நடுவே சென்றதன் மாயம் என்னவோ?
ஊருக்கும், வீட்டிற்கும், கல்விக்கும் உன் பணி உயர்ந்து நிற்கையிலே –
உன் இழப்பைக் கண்டு கதிகலங்கி நின்றாலும்,
காலனவனையும் மிஞ்சிடும் வண்ணம் – கையெடுத்து தொழுதிடும்,
கடவுள் பாதமதில் உந்தன் ஆத்மா சரணாகதியடைய பிரார்த்தனை
செய்கின்றேன்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

க. தங்கவேலாயுதன்,
குருக்கள் மடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைந்தா மனம் பொறுக்குதில்லை!

மயில்வாகனத்திற்கு பிறந்த மைத்துனா
பயிலும் போது நாம் பழகிய பழக்கம் என்ன?
கதைக்கும் போதெல்லாம் உன் கதை நகைச்சுவை
எதற்கும் அஞ்சமாட்டாய் எவ்விடத்திலும்
மாண்ட செய்தி கேட்டு மதி மயங்கி நின்றேனே
தாண்டவம் ஆடுவது போல் தலை நிமிர்ந்து நின்றவனே
அலை போல் அழுகை வருகுது மைந்தா
மலை போல் இருந்த மன்னவனே
அன்புக்கு நீயே அடைக்கலம்
பண்புக்கே நீ பரிவாளன்
கனி போல் கவர்ச்சி உன் உடல்
தனி வழி உன் வழி தரணியில்
உன்னை நினைக்கையிலே உள்ளம் குமுறுதடா
என்னோடு பழகிய நாளை எண்ணி
தயவுக்கு நீ தவிசாளன்
மாய்ந்து போனதுதான் மாயம்
நால்வரில் நீ ஒரு நட்சத்திரம்
காலம் அழைத்ததை எண்ணி கதறுகின்றேன்
சேர்ந்து விட்டாயா சேவடி
சோர்ந்து நிற்கின்றேன் நான்
கடவுளின் காலடியில் இருந்து
கடமை செய்ய கைகூப்பி நிற்கின்றேன்

சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

திரு.க. கணேசபிள்ளை
ஆசிரியர்
மட்/ குருக்கள்மடம் கலைவாணி ம.வி.

* எச் செயலையும் ஆரம்பிக்கும் முன் அதன் விளைவை ஒரு கணம் சிந்தித்து பின் தொடங்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். ம. கலாநிதி ஆசிரியர் அவர்களின் நினைவுப் பதிவுகள்

அமரத்துவம் அடைந்த கலாநிதி ஆசிரியரின் கடந்த கால சில மனப்பதிவுகளை வெளிக்கொணர சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அமரர். கலாநிதி அவர்களின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதோடு, மீளாத்துயரில் வாழ்ந்து கொண்டிருக்கும் அவரடைய மனைவி, மக்களுக்கு மனவுறுதியை இறைவன் அளிக்க வேண்டுமென அவனருளை இறைஞ்சுகின்றேன்.

பிறப்பு ஒன்று நிகழ்ந்தால் இறப்பு என்பது நிச்சயமானதொன்று. இது எப்போதும் நிகழக்கூடிய ஒரு செயற்பாடு. இதனடிப்படையில் ஒருவர் பிறந்து இறக்கும் வரை குறிப்பிட்ட வாழ்வில் எதைக் கடைப்பிடித்தோம், எதனைச் சாதித்தோம் என்பதிலே தான் ஒருவரைப் பற்றி நிழல்களும், நினைவுகளும் எம்முள் ஊசலாடுகின்றன.

கலாநிதி அவர்களின் தந்தை அமரர். சின்னத்துரை அண்ணன் எமது ஊரின் இளைஞர்கள் வரிசையில் முன்மாதிரியாக திகழ்ந்தவர். இவருடைய வாழ்க்கையில் தேவையான சந்தர்ப்பங்களுக்கேற்ப தமது செயல்திறனை வெளிப்படுத்தியவர். அவரின் மூத்த புதலிவனான கலாநிதியும் இப்பண்புகளை கடைப்பிடித்தவராக செயல்பட்டார்.

பாடசாலைக் காலங்களில் கலாநிதி கல்வியில் மிக்க தேர்ச்சியுள்ளவராக தகழாவிட்டாலும், ஏனைய செயற்பாடுகளில் தமது ஆற்றலை முழுமையாக வெளிக்காட்டியிருந்தார். அவருடைய வெளித்தோற்றத்திற்கேற்ப பணிவும், எதிலும் முன்நின்று செயல்படும் திறமையும் மற்றவர்களால் கணிப்புப் பெறச் செய்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1990இல் ஆசிரிய நியமனம் பெற்ற இவர் கற்பித்த சகல பாடசாலைகளிலும் பாடசாலைச் சமூகத்தினால் கவரப்பட்ட ஒருவர். இதற்குக் காரணம் கலாநிதி அவர்கள் மாணவர்களுக்கு கல்விச் செயற்பாடுகளை முன்னெடுப்பதிலும் பார்க்க அதிபரின் முகாமைத்துவப் பணிகள், பாடசாலைச் சமூகத்தின் தேவை. ஏனைய ஆசிரியர்களுடனான நல்லுறவு போன்றவற்றில் அதிக அக்கறையுடன் செயற்படும் விருப்பம் கொண்டவராக திகழ்ந்தார். இதனால் குறுகிய கால ஆசிரிய சேவையில் சகல அதிபர்களினதும், ஆசிரியர்களினதும் மனதில் மறக்க முடியாத இடம் பிடித்துக் கொண்டவர்.

கலாநிதி ஆசிரியர் அவர்கள் தந்தையை சிறுவயதில் இழந்தவர் என்பதனால் குடும்பத்தில் பொறுப்புணர்ச்சி உள்ளவராக விளங்கினார். இதே மாதிரி அரசாங்க வருமானம் பெறும் உத்தியோகத்தராக இருந்த போதும் தற்கால வாழ்க்கைச் செலவினை ஈடு செய்வதற்காக சுயமுயற்சியினால் சில்லறைக் கடையொன்றை தமது வீட்டிலே தொடங்கி மனைவிக்கும் ஒரு தொழிலாகி வருமானத்தைப் பெற்று சிறந்த வாழ்வினை வாழ்ந்து கொண்டிருந்தார்.

இவருடைய குறுகிய கால வாழ்வின் சேவை போதும் என்றெண்ணி இறைவன் இவரை தம்முடைய சேவைக்காக இவ்வுலகில் இருந்து தம்முடன் இணைத்துக் கொண்டார் என்று தான் கூற வேண்டும். மேலும் இவரின் ஆத்ம சாந்திக்காக அவனருள் கிடைக்க பிரார்த்திப்போம்.

மா. உலககேஸ்பரம்
பிரதிக்கல்விப் பணியாளர்,
பட்டிருப்பு கல்விவலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் நினைவில் அமரர். கலாநிதி

"மரணமே மான்புடை ஜெகவாழ்வு இறை சரணமே நம் வாழ்வு" இந்த வகையில் அமரர். கலாநிதி எங்களை விட்டுப் பிரிந்து ஜெக வாழ்வு சென்றுவிட்டார். அவரது ஆத்மா சாந்தி பெற வேண்டும். குருக்கள்மடம் பண்பாட்டு நெறிகள் தவறாத மயில்வாகனம் மனோன்மணி தம்பதியினருக்கு 1966.12.12ம் திகதி செல்வப் புத்திரராக அவதரித்தார். தனது சிறு வயதிலேயே தந்தையை இழந்து தாயின் அரவணைப்பில் வாழ்ந்த இவர் கல்வியில் முன்னேற சிறுவயதிலேயே ஆசிரியர் ஆனார். ஆக்கமும் ஊக்கமும் கொண்ட இவருக்கு ஆசிரியர் தொழில் மிகப் பொருத்தமானதாக காணப்பட்டது. அதற்கு பொருத்தமாக அவருக்குப் பல இடங்களில் ஆசிரியராக சேவையாற்றக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. ஆசிரியர் தொழிலுக்கு தன்னை ஓர் தொண்டனாக ஆக்கிக் கொண்ட இவர் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் தனது ஆசிரியர் சேவையினை நிறைவு செய்தார்.

இவர் கதிரவேற்பிள்ளை மகள் சசிலேகாவை தனது இல்லத் துணைவியாக ஏற்றுக் கொண்டு தங்கள் வாழ்க்கையில் நாமிருவர் நமக்கிருவர் என்ற ரீதியில் எடுத்துக் காட்டான குடும்பமாக வாழ வழியமைத்துக் கொண்டார். எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது. எது நடக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கிறது. எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்

அவரது திடீர் மரணம் எமக்கும் எமது சந்ததிக்கும் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியவுடன் அவரது இழப்பு பேரிழப்பாகும். அன்னாரது ஆத்மா சாந்தி பெற எம் பெருமானை வேண்டுகின்றேன்.

ஓம் சாந்தி !

க. முத்துலிங்கம்

( முன்னாள் அதிபர் கவுத்தங்குடி தலைவரும் )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்பை உணர்ந்து செயல்படுபவர்
# நம் மயில்வாகனம் - கலாநிதி அவர்கள்

எப்போதும் புன்னகை பூத்த இனிய முகம், எவரிடத்தும் இதமான பேச்சு, அரவணைத்துச் செல்லும் அன்புப் பாங்கு எதனில் ஈடுபட்டாலும் அதனில் ஒரு தனித்தன்மையை நிலைநாட்டும் அற்புத ஆற்றல், புலமை, பொறுமை, பொறுப்பு, சிறப்பு என இத்தனையும் பொருந்தியவர் தான் நல் ஆசிரியன் திரு. மயில்வாகனம் கலாநிதி அவர்கள்.

இவர் ஆசிரியராகப் பணியாற்றி இறுதியில் முதலாம் தர ஆசிரியராக அர்ப்பணிப்புச் சேவையுடன் செயல்பட்டவர். இதற்கும் மேலாக சுய தொழிலாக வர்த்தகத்தையும் தன்னோடு இணைத்து மிகையான வருமானத்தையும் பெற்று குடும்பப் பொறுப்பை மேலோங்கச் செய்தவர்.

இவரது தந்தையார் றைந்த ஆறுமுகம் மயில்வாகனம் (சின்னத்துரை) அவர்கள் ஊருக்காக உழைத்த உத்தமர். இதனால் தான் அவர்களின் புதல்வர்கள், புதல்விகள் கல்விப்புலத்தில் மேலோங்கிக் காணப்படுகின்றார்கள்.

தனது சமூகத்தில் நடைபெறும் எந்த ஒரு நிகழ்வானாலும் தானே முன்னின்று நடாத்தி வைக்கும் ஆற்றல் கொண்டவர் அமரர். கலாநிதி அவர்கள். இன்னும் எத்தனையோ ஆண்டுகள் சிறப்பாக வாழவேண்டிய நிலையில் தனது இழமை மனைவி இனிய மழலைகளை சோகத்தில் ஆழ்த்தி இறையடி சேர்ந்தது சோகமே. இருந்தாலும் ஆண்டவன் தன் மழலைச் செல்வங்களை மேலோங்கச் செய்வார் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

இவரது பிரிவால் துயர் கொள்ளும் மனைவி, பிள்ளைகள், தாய் மற்றும் சகோதர சகோதரிகள் உற்றார் மற்றும் சுற்றத்தார் அனைவருக்கும் எனது ஆழ்ந்த துயரத்தை தெரிவித்துக் கொள்கின்றேன்.

வாழ்க அவர்நாமம் வாழ்க அவர்தம் பணி

நன்றி

மா. திருநாவக்கரசு J.P,

குருக்கள்மடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். மயில்வாகனம் கலாநிதி அவர்களின் சேவைக்கண்ணோட்டம்

அமரர். மயில்வாகனம் கலாநிதி அவர்கள் 1990இல் இருந்து களுவாஞ்சிக்குடி விநாயகர் வித்தியாலயம், மகிளூர் சரஸ்வதி வித்தியாலயம், மகிளூர்முனை சக்தி வித்தியாலயம், தேற்றாத்தீவு சிவகலை வித்தியாலயம், கோட்டைக் கல்லாறு மகாவித்தியாலயம் ஆகியவற்றில் தனது ஆசிரிய சேவையினைச் செய்தவர். ஆசிரியர் ஒருவரின் பணியானது தனியே கற்பித்தலுடன் மட்டும் அமைவதில்லை. மாறாக மாணவரின் ஆளுமை விருத்திச் செயற்பாடுகள், அதற்குத் துணையாக அமையும் பாடசாலையின் அபிவிருத்திச் செயற்பாடுகள் என்பவற்றுடனும் தன்னை இணைத்துக் கொண்டு சேவை புரியும் போது பெருமை பெறுகின்றது. இந்த வகையில் அமரர். கலாநிதி அவர்கள் தெற்றாத்தீவு சிவகலை வித்தியாலயத்தில் தனது கற்பித்தல் கடமைகளுடன் முகாமைத்துவத்துடன் இணைந்து வித்தியாலயத்தின் அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டவர். பிறருடன் அன்பாகப் பழகும் சுபாவம் கொண்டவர். சமூக, சமயப் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். சிரித்த முகத்துடன் சுறுசுறுப்பாக வேலைகளைச் செய்பவர். ஒரு ஆசிரியரின் இழப்பு பல மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கு இழப்பினைத் தரும். இருந்தும் இவரது பணியினைத் தொடர முடியாது. முடித்து வைத்த மரணத்தை யாராலும் தடுக்க முடியாது. பொய்யான மேனிக்கு 'மெய்' என்ற பெயர் மங்கலம்.

"நெருநலுடைத் தொருவன் இன்றில்லை என்னும் பெருமை
யுடைத்ததிவ்வுலகு" அவரின் ஆன்மா சாந்தி பெற இறைவனைப்
பிரார்த்திக்கின்றேன்.

**திருமதி. வே.குணநாயகம்**
**கோட்டக்கல்விப் பணிப்பாளர்**
**ம.தெ.எ.பற்று.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ம் நாள் இதய அஞ்சலி

மயில்வாகனம் மனோன்மணி தம்பதியர்
பாசத்தோடு பெற்றெடுத்த பண்பு மகன்
ஊர் போற்றும் பெயர் பெற்ற கலாநிதி
வஞ்சகங்கள் இல்லாத நல் மனம் கொண்டவர்
சொல்லொண்ணா துயரத்தில் உமை ஆழ்த்தி சென்றதென்ன

விளக்கொளியாய் மிளிர்ந்திட்ட உன் வாழ்வு
இனி விளங்கிட யாரப்பா பணி செய்வார்
புகழ் பூத்தாய் தடம் பதித்தாய்
தாரணியில் நீ நமிர்ந்து நடை பயின்றாய்
தக்கோர் உனை வெல்ல யாருமில்லையப்பா

வந்தவுடன் அரவணைத்து எனை வரவேற்று
சேர் என்ற வார்த்தையால் என்மனம் குளிரச் செய்வாய்
தவறேதும் இழைத்தறியாய்
யாருக்கும் தப்பேதும் செய்தறியாய்
மாயை என்ன நேர்ந்ததென்று மனமுடைந்து ஏங்குகின்றேன்

நீ பெற்ற பூர்வபுண்ணியத்தால்
உடன் பிறந்தோர் பலர் இருந்தும் உனக்கு
உதவுவதற்கு உற்றர்கள் சிலர் இருந்தும்
கடமை முடிந்தது வாவென்று காலன் அழைத்தனனே
கதறுதே பிள்ளைகள் சுற்றத்தார் உனை எண்ணி

மலர்ந்த மலர்கள் எல்லாம் வாடி மடிவது இயல்பாகும்
பிறக்கும் உயிர்கள் எல்லாம் இவ்வுலகை விட்டு பிரிவதே இயல்பாகும்
உனது பூதவுடல் மறைந்தாலும் உன் புனித நாமம் மறையாதப்பா
புலரும் பொழுதுகள் யாவும் உன் புகழ் கூறுவதே யினி நிகழ்வாகும்
இறை நிழலில் திழைத்திருக்க என் இத அஞ்சலி.

**திரு.P.R.சந்திரபோஸ்**
**அதிபர்**
**மட்/ தேற்றாத்தீவு சிவகலை வித்தியாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்/ கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலய அதிபர் அவர்களின் நினைவுப் பேருரை

அமரர் கலாநிதி ஆசிரியர் சிறுவயதிலேயே ஆசிரியர் சேவையில் இணைந்து பல பாடசாலைகளில் சேவை புரிந்து இறுதியாக எங்கள் கோட்டைக் கல்லாறு மகாவித்தியாலயத்திற்கு தனது சேவையினை ஆற்றுவதற்கு இடம் மாற்றமாகினார். இவர் தனது சக ஆசிரியர்களுடனும் மாணவர்களுடனும் இதமாகப் பேசி பழகுவதுடன் அவரது உடலைப் போல் அவரது மனமும் வெண்மையானது.

கலாநிதி ஆசிரியர் மட்/ கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலயத்தைப் பொறுத்த வகையில், தனக்கு ஒதுக்கப்பட்ட பாடங்களை சிறந்த முறையில் கற்பித்தவர் அத்துடன் சிறந்த சேவையாளர், மாணவர்களது இலவச சீருடை, இலவச பாடநூல் என்பவற்றை அலுவலகத்திலிருந்து எடுத்து வருதல், மாணவர்கள் சுகவீனமுற்ற போது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லுதல் அல்லது அவர்களது வீடுகளுக்குக் கொண்டு செல்லுதல், மாணவர்களை போட்டி நிகழ்ச்சிகளுக்கு அழைத்துச் செல்லல் போன்ற சகல காரியங்களிலும் அர்ப்பணிப்போடு செயற்பட்டவர். இக்காரியங்களுக்காக போக்குவரத்து செலவுகள் எவற்றையும் எதிர்பாராத ஒரேயொரு ஆசிரியர். " கலாநிதி எவ்வளவு செலவாகியது என்று கேட்டால், அது பிரச்சனையில்லை சேர் " என்று கூறுவார்.

கடந்த வருடம் நடைபெற்ற இல்ல விளையாட்டுப் போட்டியின் போது இரவு நேரத்தில் நின்று இல்லச் சோடனை செய்யும் போது தனது சொந்தச் செலவில் மாணவர் மாணவர்களுக்கு தரமான இரவுச் சாப்பாடு கொடுத்தது எனக்குத் தெரியும்.

கடவுள் எது நடக்க வேண்டும் என்று எழுதியுள்ளானோ அதுதான் நடக்கும். இவரது மறைவு அவரது குடும்பம், உறவினர்கள், ஏனையவர்களுக்கு மாத்திரமல்ல எனது பாடசாலைக்கும் எனக்கும் பேரிழப்பாகும்.

" ஆண்டொன்று தோறும் அழுதபுரண்டாலும்
மாண்டார் வருவாரோ மாநிலத்தில் வேண்டாம்
நமக்கு மதுவழியே காலம் போமளவும்
எமக்கென்ரிட்டுண்டிரும். "



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ம் நாள் நினைவஞ்சலி
## அமரர். கலாநிதி ஆசிரியர் அவர்கள்

எங்கள் பாடுமீன்தேன்நாடாம் இயற்கை அழகும், கடல் வளமும், நில வளமும் நிறைந்த மட்டக்களப்பு மாவட்டத்திலே அமைந்திருக்கும் சைவமும், தமிழும் கொஞ்சி விளையாடும் முத்தமிழும் முக்கலையும் நிறைந்த கற்றறிந்த அறிஞர்கள் வாழும் குறையேதும் இல்லாத நிறைபதியாம் குருக்கள்மடம் நற்பதியில் வாழ்ந்தவர்கள் தான் அமரர். கலாநிதி .

நற்பண்புகள், நல்லொழுக்கம் அமைதியான சுபாவத்துடன் திறமை, ஆற்றல், சிறப்புக்கள் அனைத்தும் ஒருங்கே அமையப் பெற்று புனிதமான ஆசிரியர் சேவை செய்தவர் தான் கலாநிதி அவர்கள். " தோன்றிற் புகழுடன் தோன்றுக " என்பதற்கமைய சேவைமனத்துடன் அயராது அரும்பணிகள் செய்தவர். இவர் கல்வியிலே ஆர்வம் கொண்டு உயர்கல்வி கற்பதற்காக வெளிநாடு செல்ல முயற்சி செய்த வேளையில் எவருமே எதிர்பாராத விதமாக காலன் இவரைக் கவர்ந்ததால் இறைவனடி சேர்ந்தார். இந்த பரிதாபகரமான நிலைமை அனைவருக்கும் துன்பமானது. துயரமானது. சோகமானது. கவலை தரக் கூடியது.

இவர் மறைந்தாலும் இவர் சேவையும், நினைவும் அவரவர் மனதிலும் அழியாமல் நிலைத்து நீடித்து வாழும் என்பது உண்மையாகும். இவர் இழப்பு அனைவருக்கும் ஈடுசெய்ய முடியாத பெரிய ஒரு இழப்பாகும். இவர் பிரிவால் கவலையுடன் வாழும் அவரின் மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர், குடும்பத்தவர்களுக்கு என் கவலையை, ஆறுதலை, அஞ்சலியை சமர்ப்பித்து அவர் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

சட்டத்தரணி.த.சிவநாதன்,
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசகீர்த்தி, சோதிடகலாமணி, கிரியாஜோதி
## சிவஸ்ரீ.ஜீ.என். திருக்கனேஸ்வர குருக்கள் (J.P) (P.I.M,P)
## அவர்களின் இரங்கல் செய்தி

மட்/ குருக்கள் மடத்தைச் சேர்ந்த உயர்திரு மயில்வாகனம் கலாநிதி அவர்களின் திடீர் மறைவு அனைவரையும் துயரத்தில் ஆழ்த்தியது.

நானறிந்த வரையில் கன்னியமான குடும்பத்தில் பிறந்து தனது அயராத முயற்சியால் கல்வியில் உயர்ந்து ஒரு சிறந்த ஆசானாக, பண்பாளனாக வாழ்ந்தவர், தேற்றாத்தீவு கோட்டைக்கல்லாறு வித்தியாலயங்களில் தனது பணியை சிறந்த முறையில் நிலைநாட்டியவர்.

" துறந்தார் பெருமை துணைக் கூறின்
வையத்து இறந்தாரை எண்ணிக் கொண்டற்று "

என்ற குறளுக்கு அமைய பெருமையுடன் வாழ்ந்தவர். அவர் வழியில் மைந்தர் பணிகள் தொடர வேண்டும் என கூறி அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி அமரர். ம. கலாநிதி அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திப்போம்

ஓம் சாந்தி, ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

என்றும் இறைபணியிலுள்ள,
சிவஸ்ரீ.ஜீ.என். திருக்கனேஸ்வரகுருக்கள்,
அருள்மிகு பழனியாண்டவர் ஆலய பிரதமகுரு,
வைத்திய வளாகம் மட்/ ஆரையம்பதி,

❖ வாழ்க்கையை பாழாக்கியவை "நான்" "எனது" "நீர்" "உமது" என்பவையே. அவற்றை மறந்து விடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அபயக் கிரியைகள்

(மரணக்கிரியைகள்)

நாம் இப்பூவுலகிற் பிறந்து சைவ வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அதற்காக விரத அநுட்டானங்கள், சமயக்கிரியைகள் வழுவாது செய்து வருகிறோம். மனிதவாழ்வில் பிறப்பும் இறப்பும் மனிதனுக்கே உரித்தானது. நாம் வாழும் போது செய்யும் கிரியைகள் பூர்வக்கிரியைகளாகும். நாம் இறந்தபின் எம்பொருட்டுச் செய்யப்படுபவை அபயக் கிரியைகளாகும். அபயக்கிரியைகள் என்றால் என்ன, அவையாவை என்ற விளக்கங்களை நாம் அறிந்திருத்தல் அவசியம்.

ஆனமையின் அபரக்கிரியைகள் பற்றி இங்கு நோக்குவோம். பிராமணர்களுக்கு அவர்களது கிரியைகள் வைதீக முறைப்படி நடைபெறுவது வழக்கம். உயிர் தான் எடுத்த உடம்பில் இருந்து நீங்குவது மரணம் ஆகும். ஆகவே அந்த உயிரின் பொருட்டு, ஆன்மாவின் பொருட்டு நாம் செய்யும் கிரியைகள் அபயக்கிரியைகளாம். ஆன்மா உடலை விட்டு நீங்கியதும் அது சிவன் தாழ்களை அடையும் என்பது சமயம் கூறும் தத்துவமாகும். அதுவே எமது நம்பிக்கையுமாகும். ஆகவே தான் நாம் இறந்தவருக்கான கிரியைகளை கிரமமாக, முறையாகச் செய்து வருகின்றோம்.

ஆகவே ஒருவர் இறந்தால் அவரது சிவபத உடம்பை சிவமாக்கி, குளிக்கவார்த்து, கோடி வஸ்திரம் தரித்து, மலர்மாலை சாத்திக் கிரியைகள் செய்து சிவாக்கினியால் தகனஞ்செய்கிறோம். அவர் பொருட்டு தான தர்மங்களைச் செய்கின்றோம்.

❋ தீயதை நினைப்பதும், தீயவற்றுக்கு பயப்பிடுவதும் ஒருவரின் புத்தியை தீயதாக்கி விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபரக்கிரியைகள் யாவை?

1. உத்திராந்திக்கிரியை - மரணித்ததின்பின் செய்வது
2. தகனக்கிரியை
3. சாம்பல் எடுத்தல்
4. எட்டாம் நாள் கிரியை
5. அந்தியேட்டி
6. துடக்குக் கழிவு
7. வீட்டுக்கிருத்தியம்
8. மாசிகம்
9. ஆட்டத் திவசம்

என்று வகுத்துக் கூறலாம்.

## ஒருவர் இறக்கப்போகும் நிலையில் நாம் என்ன செய்தல் வேண்டும்?

அ. இறக்கும் நிலையில் உள்ளவர் உலகப் பற்றை விட்டு நீங்கி சிவலோகத்தை அடைய அவரது வலது காதில் "சிவ, சிவ" என்றும் "ஓம் நமசிவாய" என்றும் சொல்ல வேண்டும். திருமுறைப்பிராணஞ்செய்யலாம். நெற்றியில் "சிவ சிவ" எனச் சொல்லி திருநிறு அணிய வேண்டும். முதலில் மூத்த மகனும் பின்னர் மனைவி, பிள்ளைகளும் சொல்லித் திருநீறு அணியலாம்!

ஆ. அவர் மரண அவஸ்தையில் இருக்கும் பொழுது கோவில் குருக்களுக்குப் பசுவைத்தானமாகக் கொடுக்கலாம்.

இ. அவர் பொருட்டு பிள்ளைகள் தான தர்மங்களைச் செய்வதால் அவர் ஆன்மா திருப்தியடைகின்றது.

❖ அன்பு இன்றி அமைதி இல்லை. தூய்மை இன்றி அன்பு இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இறந்ததும் நாம் அவரது சிவபூத உடம்பை என்ன செய்யவேண்டும்?**

அ. முதலில் உடம்பைச் சுத்தம் செய்தல் வேண்டும். புதிய உடைஃதோய்த்து உலர்ந்த உடையை அணிந்து திருநீறு பூசி, சந்தனம் குங்குமம் இடல் வேண்டும். குங்குமம் சுமங்கலிகளுக்கும் இளம்பெண்களுக்கும் இடவும்.

ஆ. நிலம், கட்டில் சுத்தஞ்செய்து கட்டிலை தெற்கு வடக்காக வைத்து தர்ப்பை நுணியை தெற்கு நோக்கி வைத்தல் வேண்டும்.

இ. இப்பொழுது அவரின் சிவபூத உடம்பை தலை தெற்கு நோக்கியும் கால் வடக்கு நோக்கியும் இருக்க வைக்கவும்.

ஈ. தெற்குப்புற தலைமாட்டிலே தெற்கே திரியை வைத்துத் தீபம் ஏற்றவும். ஊதுபத்தியைக் கொழுத்தவும். (இவையாவும் இப்பொழுது மலர்ச்சாலைகளாற் செய்யப்படுகின்றன)

பிரேதத்தை உரிய முறையில் வைத்ததும் உற்றார், உறவினர் எல்லோரும் ஒன்று கூடி நின்று அழுது தமது துக்கத்தைக் காட்டுவது இப்பொழுதேயாகும். (இவ்வளவு நேரமும் இறந்தவருக்காக எல்லாத் துக்கத்தை அடக்கிகொண்டு செய்தமையால் இப்பொழுது அவரைக் காணத் துக்கம் மேலிடுவது இயல்பு)

**இவைகளைத் தொடர்ந்து நாம் செய்வது என்ன?**

உற்றார், உறவினர், நண்பர் முதலானோருக்கு 'இழவு' அறிவித்தல் ஆகும். அதாவது இன்னார் இறந்து விட்டார் இன்னநாள் தகனக்கிரியை என்ற விபரம் ஆகும்.

❖ உண்மையும், நேர்மையும் இயல்பாக என்னிடம் இருப்பின் இறைவனின் அன்பு எளிதாகக் கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இறந்தவருக்கான கிரியைகள் யாவும் குருக்கள் தலைமையில் நடைபெறும்.**

1. இங்கே பிள்ளையார் பூசை, பஞ்சகவ்விய பூசை, புண்ணிய வாசனம், உருத்திரகும்பபூசை,சிவாக்கினிவளர்த்தல், திருப்பொற்சுண்ணப் பாடல்களைப் பாடித் திருபொற்சுண்ணம் இடித்தல், பிரேதத்தை அலங்கரித்து திருநீறு அணிதல் திலகம் இடல் முதலான கிரியைகள் நடைபெறும்.

2. திருமுறைப் பாராயணம் செய்யப்படும்.

3. இறந்தவர், சிவபூஜா துந்தரர் என்றால் அந்தியேஷ்டியைக் குருக்கள் தலைமையிற் செய்க.

4. பிரேதம் தூக்கும் முன் வீட்டில் உள்ள இரத்த உருத்துக்காரர் வாய்கரிசி இடலாம்.

5. மயானத்திற்குக் கொண்டு செல்வதற்கான பொருட்கள் மட்டும் தயார் செய்து வைத்துக்கொள்ளல் அவசியம். (இவை பின்னர் வீட்டிற்கு எடுத்துவரப் படாதவை)

6. பிரேதம் தூக்கியவுடன் (காற் பக்கம் முன்னே) பேரப் பிள்ளைகள் வீட்டுவாயில் வரை நெய்யபந்தம் படிப்பது வழமை)

7. சங்கு, சேமக்கலம், வாத்தியம், திருமுறைப் பாராயணத்துடன் பிரேத ஊர்வலம் மயானம் நோக்கிப் புறப்படும்.

8. கர்த்தா கொள்ளிக் குடத்துடன் முன்செல்லல் வேண்டும். அவரோடு சிவாக்கினியும் எடுத்துச் செல்லப்படும்.

> ❋ ஒரு சமூகம் நல்லொழுக்கத்தை இழந்தால் அது எல்லாவற்றையும் இழந்து விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மயானக்கிரியை

1. மயானத்தில் விறகு தெற்கு வடக்காக அடுக்கப்படும்.
2. பிரேதக் கிரியைகளைக் குருக்கள் அவர்கள் கர்த்தாவுக்கு உபதேசித்துச் செய்வார்.
3. பிரேதம் தலை தெற்கு நோக்கி வைக்கப்படும்.
4. இப்பொழுது கர்த்தாவானவர் சிவகும்பமான கொள்ளிக்குடத்தை தமது தோளில்சுமந்த வண்ணம் அப்பிரதஷணமாக (இடம் வலமாக) மூன்று முறை சுற்றி வந்து பிரேதத்தின் தலை மாட்டில் கொள்ளிக்குடத்தை உடைப்பார்.
5. இறந்தவருக்கு சில்லறைக்காசும் வாய்கரிசியுஞ் சேர்த்து வாயடியில் இடப்படும். பின்னர் அவரின் காலடியில் சென்று பஞ்சாஷர மந்திரம் சொல்லி நமஸ்கரிக்க வேண்டும்.
6. இனி, இறுதியாக இறந்தவருக்கு தீயிட்டு அவரைப் பார்க்காது செல்லுதல் வேண்டும்.
7. இறந்தவர்கள் பொருட்டு நக்னதானம் - வேட்டி, அரிசி, காய்கறி கொடுக்கப்படல் வேண்டும்.

## வீடுசெல்லல்

பிரேதம் சென்ற பின் வீடு கழுவப்படும்.

1. கர்த்தாவானவர் வீட்டு வாயிலில் வேப்பிலையைக் கடித்தபடி உலக்கையைக் கடந்து சென்று கை, கால் கழுவுவார்.
2. முகச்சவரம், சவரம், மொட்டையடித்தல் அவர்கள் தமது வழமைக்கு அமையச் செய்யலாம்.
3. கர்த்தா தலைக்கு தோய்த்து உலர்ந்த ஆடை உடுத்து திருநீறு அணிந்து இரத்த உறவுகளுடன் உணவு உட்கொள்ளுவார்.

❋ மனிதனின் எண்ணங்கள் வீழ்ச்சியடையும் போது ஒழுக்கம் என்று எதனை அழைப்பது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டு வழிபாடு

பிரேதம் இருந்த இடத்தில் ஆட்டத்திவசம் முடியும் வரை அல்லது 31ஆம் நாள் வரை தீபம் ஏற்றி, ஊது பத்தி கொழுத்தி, செம்புத் தண்ணீரும் வைத்து (இளநீர் பகலில் வைக்கலாம்) காலையும் மாலையும் தேவாரஞ்சொல்லித் தியானிக்க வேண்டும்.

## சாம்பல் அள்ளுதல்

தகனஞ் செய்த அன்று/ மறுநாள்/ மூன்றாம் நாள் சாம்பல் அள்ளுதல் நடைபெறும். குருக்கள் வந்து கிரமமாக கிரியை செய்து சாம்பல் அள்ளும் கிரியைகளாகச் செய்வார். எடுத்த சாம்பலை குளம், ஆறு, கடல் புனித நீரில் கரைத்து விடவேண்டும். இலங்கை சைவ பெருமக்கள் பன்நெடுங்காலமாக இராமேஸ்வரம் காசியில் சாம்பலைக் கொண்டு சென்று அங்கும் கரைத்துக்கிரியைகளை செய்வது ஓர் சிறப்பம்சமாகும். அவ்வாறாயின் இந்தியா செல்லும் வரை சிறிதளவுச் சாம்பலை மலர்சாலையில் வைக்கலாம். (சாம்பலை வீட்டிற்குள் கொண்டு வரக்கூடாது) அல்லது வீட்டு வளவின் இடப்புறத்தே பால் மரத் தடியில் தெற்கு நோக்கிப் புதைத்து வைக்கும் வழமையும் உள்ளது. இந்தியா யாத்திரை புறப்படும் போது இது எடுத்துச் செல்லப்படும்.

## எட்டுச் செலவு

இது குடும்ப வழமை வழிபாடு. இதற்கு கிரியைகள் இல்லை. இறந்தவர் பொருட்டு சைவ உணவுகளைப் படைத்து தூபம் காட்டி கற்பூரம் காட்டி வழிபடுவதாகும். இப்படையலில் ஒரு பங்கையும் இளநீரையும் முச்சந்தியில் வைக்கும் வழமையும் உள்ளதுட்கொள்ளுவார்.

> ❖ நான் மற்றவர்களது பலவீனங்களை எனது மனதில் வைத்திருந்தால் அவை என்னில் ஒரு பகுதியாகி விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தியேஷ்டி

28ஆம் நாள்முதல் 31ஆம் நாளுக்கிடையில் காலையில் நீர்ச்சுனைகளை அடுத்துக் குருக்கள் தலைமையில் செய்யப்படுவதாகும். இக்கிரியையன்று வீடு கழுவுதல் வேண்டும்.

## வீட்டுக் கிருத்தியம்

31ஆம் நாள் காலை வீடு கழுவி துடக்குக் கழிக்க வேண்டும். இதற்குக் கோவில் குரு/ புரோகிதர் வருவார். பின்னர் வீட்டிலே சமையல் செய்ய வேண்டும்.

இதுவரை உயிர்பிரிந்த சிவபூத உடம்பிற்கும் பிரிந்து சென்ற ஆன்மாவிற்குமான கிரியைகள் இடம் பெற்றன. இனி ஆன்மா சாந்தி நிலையை அடைவதற்கான கிரியைகள் வீட்டுக்கிருத்தியத்தில் இடம் பெறும்.

இக்கிரியைகள் கோவில் குருக்கள்/ புரோரிதர் தலைமையில் நடைபெறும். நண்பகல் நடைபெறும் கிரியைகளில் முதலில் புண்ணியாக வாசனம் (பிள்ளையார், பஞ்சகவ்ய, வருண கும்ப பூஜை இடம் பெறும். தொடர்ந்து:

நவ சிராத்தம்
ஏகோதிட்டம் - இறந்தவரின் ஆன்மாவைத் திருப்திப்படுத்துதல்
சம்திா சிராத்தம்
மாசிகம் - 15
இடப தானம் - சிவாலய குருவிற்குரியது
பிண்டம் இடுதல் - படையல் அர்ப்பணித்தல்
பஞ்சபுராணம் படித்தல்
எள்ளுந் தண்ணீரும் இறைத்தல்
முதலான கிரியைகள் செய்யப்படும்.

இந்நாளில் இறந்தவருக்கான நினைவாஞ்சலி நூல் இறந்தவரின் படத்திற்கு முன்வைத்து அவருக்கு மாலை இட்டு தீபம் ஏற்றப்படுவது வழமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஞ்சதச மாசிகம்

வீட்டுக்கிருத்தியத்தைத் தொடர்ந்து இறந்தவர் பொருட்டு மாதா மாதம் மாசிமகம் செய்யப்படும். தற்போது உள்ள நிலையில் சிலர் மோஷ அர்ச்சனை செய்து அரிசி, காய்கறிகளைக் குருவிற்கு கொடுத்து அவர் ஆசியைப் பெறுகின்ற வழமையும் உள்ளது. இறந்தவர் பொருட்டு 15 மாசிகங்கள் செய்யப்படும்.

***அதன் விபரம் :***

| | |
|---|---|
| ஊன மாசிகம் | - இறந்த 27-31 நாட்களுக்கிடையிற் செய்யப்படும். |
| துசிய மாசிகம் | - மாதாமாதம் திகதியில் இடம் பெறுவது. |
| திரைபஷ மாசிகம் | - 40-45 நாட்களுக்குள் செய்யப்படுவது. |
| 3ஆம் 6ஆம் மாசிகம் | - திதியில் செய்யப்படுவது. |
| ஊன ஷன் மாசிகம் | - 17-180 நாட்களுக்கிடையில் செய்யப்படுவது |
| 7ம், 12ம் மாத மாசிகம் | - திதியில் செய்வது. |
| ஊன ஆப்திக மாசியம் | - 345 - 360 |

## ஆட்டத் திவசம் - (சிரார்த்தம்/திதி)

இஃது ஒருவர் இறந்து 15 மாசியங்களும் செய்த பின் ஒருவருடப் பூர்த்தியிற் செய்யப்படுவதாகும். உதாரணமாக புரட்டாதி மாத வளர்பிறை பிரதமையில் வரும். சிரத்தை (பக்தி, விருப்பம், ஆசை) யுடன் செய்யப்படுவது சிராத்தம் ஆகும். வீட்டுக்கிருத்தியம் போன்ற பக்தி மிகு பிதிர் வழிபாடு ஆட்டத்திவசம் ஆகும். கோவில் குருக்கள்ஃபுரோரிதர் தலைமையில் இக்கிரியைகள் இடம் பெறும். 15 மாசியங்களும் செய்யப்படும். பிண்டம் இட்டு எள்ளுத் தண்ணீரும் இறைத்து வழிபாடுகள் இடம்பெறும். படையல், பழவகை, இளநீர் நைவேதிக்கப்பட்டுப் பஞ்சபுராணம் படிக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கிரிகையின் போது இறந்த - ஆன்மாவுக்கான பிண்டம் வழிபாடுகளின் பின்னர் அவரது மூதாதையருக்கான பிண்டத்துடன் சேர்க்கப்படும்.

**அமாவாசையில் நாம் என்ன செய்ய வேண்டும்?**

ஆட்டத்திவசம் முடிந்த பின்வரும் அமாவாசை முதல் ஒவ்வொரு அமாவாசையிலும்

1. எள்ளுத்தண்ணீரும் இறைத்தல்.
2. குருவுக்கு அரிசி, காய்கறி தானம் கொடுத்தல்.
3. மோஷ அர்ச்சனை/ மோஷ தீபம் ஏற்றி வழிபடுதல்.

முதலானவற்றைச் செய்வதால் ஆன்மா திருப்தி அடையும். பிதிர் ஆசி கிட்டும்.

**தை அமாவாசை, ஆடி அமாவாசைகளின் முக்கியத்துவம் என்ன?**

இவை சூரியனின் சஞ்சாரத்துக்கமைய உள்ள தஷணாயணம் (தெற்கு நோக்குதல்) உத்திராயணம் (வடக்கு நோக்குதல்) ஆகிய இரு காலத்துக்கான ஆனமையின் இவ்விருகால அமாவாசைகளும் சிறப்புப் பிதிர் வழிபாட்டு அமாவாசைகள் புண்ணிய தீர்த்தம் ஆடி இந்த அமாவாசைகளிலும் சிராத்தஞ் செய்வது முக்கியம்.

**மஹாளய அமாவாசை**

இந்த அமாவாசை எவ்வகையில் முக்கியத்துவம் பெறுகின்றது?

புரட்டாதி மாத அபரபஷ பிரதமை முதல் (பூரணையின் மறுநாள்) புரட்டாதிமாத அமாவாசை வரை உள்ள காலத்தில் பிதிர்கள் யமலோகத்தில் இருந்து பூவுலகிற்கு யமதர்மராஜாவினால் அனுப்பப்படுகின்றார்கள் என்பது ஐதீகம். ஆதலால் நாம் வீட்டில் சிராத்மஞ் (திவசம்/திதி) செய்து வருகின்றோம். நமதுநாட்டில் ம'ாளய அமாவாசையன்று பிதிர் வழிபாட்டினை சைவப் பெருமக்கள் பக்தி சிரத்தையுடன் செய்துவருவதை இங்கு குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**துர்மரணம்/ மரணக்கிரியை எவ்வாறு செய்வது?**

துர்மரணம் என்றால் தானே தனது உயிரைப்போக்கும் எதிர்பாராது நடைபெறும் மரணம் என இருவகைப்படும். இதனைத் தெளிவாகக் குருக்களுக்கு விளக்குதல் அவசியம். இது சாதாரண அக்கினியால் தகனம் செய்யப்பட்டு இந்தியஷ்டியில் மீண்டும் தர்ப்பையால் மனித உருவஞ்செய்து தகனஞ்செய்து மிகுதிக்கிரியைகள் தொடரும் துர்மரணித்தோர் பைசாச உருவில் அலைவர். ஆதலால் பைசாசுகளுக்கு அதிபதியான வைரவர் பெருமானுக்கு சாந்தி செய்தல் முக்கியம். 3 மாதம் 6 மாதத்தின் பின் கிரியைகள் செய்யப்படும்.

**தனிஷ்டா பஞ்சமிச்சாந்தி என்றால் என்ன?**

அவிட்டம், சதயம், புரட்மாதி, உத்திரட்டாதி ரேவதி நட்சத்திர நாட்களில் ஒருவர் இறந்தால் வீட்டுக் கிருத்தியம் முடிந்தபின் தனிஷ்டா பஞ்சமி சாந்தி செய்யவேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. இந்நட்சத்திரத்தில் ஒருவர் மரணித்தால் அதனால் வீட்டில் உள்ளோருக்குத் தோஷம் உண்டம் என விளக்கப்பட்டுள்ளது. ஆதலால் மரணக்கிரியையின் போது குருக்கள் நீற்றுப்பூசனிக் காயை பூசை செய்து வீட்டில் வைப்பார். இது பஞ்சமிசாந்தியின் போது அவரால் வெட்டிக் கிரியைகள் செய்யப்படும்.

| | |
|---|---|
| அவிட்ட நட்சத்திரத்தில் மரணம் ஏற்படின் | - 6 மாதம் |
| சதய நட்சத்திரத்தில் மரணம் ஏற்படின் | - 3 மாதம் |
| புரட்டாதி நட்சத்திரத்தில் மரணம் ஏற்படின் | - 1 1/2 மாதம் |
| ரேவதி நட்சத்திரத்தில் மரணம் ஏற்படின் | - 15 நாட்கள் |

தோஷம் எனக் கூறப்பட்டுள்ளது.

ஆகவே இந்நட்சத்திரங்களில் இறந்தால் கர்த்தாவானவர் வீட்டுக் கிருத்தியஞ் செய்தபின்னர் தனிஷ்டா பஞ்சமித் சாந்தியைச் செய்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தார் பாடல்

(1) பிறக்கும் பொழுது கொண்டு வந்ததில்லை பிறந்து மண்மேல்
இறக்கும் பொழுது கொண்டு போவதில்லை இடைநடுவில்
குறிக்கும் இச்செல்வம் சிவன் தந்ததென்று கொடுக்கறியா
திறக்குங் குலாமருக்குகென் சொல்லுவேன் கச்சி ஏகம்பனே!

(2) பத்தும் புகுந்து பிறந்து வளர்ந்து பட்டாடை சுற்றி
முத்தும் பவளமும் பூண்டு ஓடி ஆடி முடிந்தபின்பு
செத்துக் கிடக்கும் பிணத்தருகே இனிச் சாம்பிணங்கள்
கத்தும் கணக்கென்ன காண்கயிலா புரிகாளத்தியே!

(3) ஊரும் சதமல்ல, உற்றார் சதமல்ல
உற்றுப் பெற்ற பேரும் சதமல்ல பெண்டீர் சதமல்ல
பிள்ளைகளும் சீரும் சதமல்ல செல்வம் சதமல்ல
தேசத்திலே யாரும் சதமல்ல நின்றாள்சதம் கச்சி ஏகம்பனே!

(4) இருப்பது பொய் இறப்பது மெய் என்றெண்ணி நெஞ்சே
ஒருத்தருக்கும் தீங்கினை நீ உன்னாதே!
பருத்த தொந்தி நம்மதென்று நாமிருக்க
நாய்நரிகள் பேய் கழுகு தம்மதென்று தாமிருக்கத்தான்.

(5) கட்டியணைத்திடும் பெண்டீரும் மக்களும் காலத்தச்சன்
வெட்டி முறிக்கும் மரம்போல் சரீரத்தை வீழ்த்தி விட்டால்
கொட்டி முழங்கி யழுவார் மயானங் குறுகியப் பால்
எட்டியடிவைப்பாரோ இறைவா கச்சியேகம்பனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாரடைப்பு - நோய்பற்றிய குறிப்பு

இலங்கையிலும் சரி, உலகளாவிய ரீதியிலும் சரி மாரடைப்பு பொதுவாகக் காணப்படும் ஒரு நோயாகும். இது மருத்துவ உலகில் Myocardial infarction எனப்படுகிறது.

இதயத்திற்கு குருதியை வழங்கும் குருதிக் குழாய்களில் ஏற்படும் அடைப்புக்காரணமாக இதயத் தசைகளில் இறப்பு நேரிடுதலையே மாரடைப்பு என்கின்றோம். இதயமானது உடலின் அனைத்து பாகங்களுக்கும் குருதியை வழங்குவதோடு இதயத் தசைகளுக்கு குருதியை வழங்குகின்றது.

இதயத்திற்கு குருதி வழங்கும் குருதிக்குழாய் முடியுருநாடி (Coronary artery) எனப்படும். இவ் குருதிக்குழாய்களில் அடைப்பு ஏற்பட்டால், இதயத் தசைக் கலங்களுக்கு தேவையான போசணை மற்றும், ஒட்சிசன் என்பன கிடைக்கப் பெறாததாலும் இதயக் கலங்களிலிருந்து கழிவுகள் அகற்றப்படாததாலும் இதயத்தினது கலங்கள் இறக்க நேரிடலாம்.

### நோயின் அறிகுறிகள்

1. நெஞ்சுவலி ( நெஞ்சின் மத்தியில்)
2. அவ்வலியானது கழுத்து, தாடை, வயிறு அல்லது இடது கை ஆகியவற்றிற்கு பரவுதல்.
3. வலியானது அதிக நேரம் நீடித்தல்.
4. அவ்வலியானது ஓய்வெடுப்பதால் குறைவடையாமை மற்றும் GTN (நாக்கின் கீழ் வைக்கும்) மாத்திரையாலும் குறைவடையாமை.
5. அதிகளவு வியர்த்தல், மயக்கம், களைப்பு என்பவற்றுடன் நெஞ்சுவலி ஏற்படுதல்.

மேற்குறிப்பிட்ட அறிகுறிகள் ஏற்படின் பதற்றப்படதமல் உடனடியாக வைத்தியரை நாடவும்.

### இந்நோய் ஏற்படுவதற்காக ஆபத்து காரணிகள்

1. நீரழிவு நோய்
2. உயர்குருதி அமுக்க நோய்
3. அசாதரான கொழுப்பு பரம்பல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. புகைத்தல்

5. வயதாதல் (இளம் வயதினருக்கு இந்நோய் ஏற்படும் சாத்தியம் குறைவு)

6. ஆண்களை விட பெண்களுக்கு இந்நோய் ஏற்படவதற்கான வாய்ப்பு குறைவு எனினும் பெண்களுக்கு மாதவிடாய் காலத்தின் பின்னர் ஏற்படக் கூடிய வாய்ப்பானது கிட்டத்தட்ட ஆண்களை ஒத்ததாகும்.

7. உடற்திணிவு சுட்டி அதிகமாக இருத்தல்.

8. அதிக அளவில் மதுபானம் பாவித்தல்.

9. உணவுப்பழக்க வழக்கங்கள்:

(அதிக கொழுப்பு உடைய உணவுகளை உண்பதாலும், தாவர உணவுவகைகளைக் குறைவாக உண்பதாலும் இந்நோய் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாகும்.)

10. ஒழுங்கான உடற்பயிற்சி இன்மை.

11. உங்கள் இரத்த உறவினர் யாருக்காவது 50 வயதிற்கு உள்ளே மாரடைப்பு ஏற்பட்டிருந்தால் உங்களுக்கு ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் உண்டு.

## நோயை தவிர்க்கும் வழிமுறைகள்

01. நீரழிவு நோய் உள்ளவர்கள் குருதியில் குளுக்கோசின் வைத்திய ஆலோசனைப்படி கட்டுப்பாட்டில் வைத்திருக்கவேண்டும்.

02. உயர் குருதி அமுக்க நோய் உள்ளவர்கள் வைத்திய ஆலோசனைப்படி குருதி அமுக்கத்தை கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும்.

03. உடற்பருமனை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருத்தல்.

4. கொழுப்பு குறைவான உணவை உட்கொள்ளல்.

5. பச்சைக் கீரைவகை, மரக்கறி பழங்களை உணவில் அதிகளவில் சேர்த்தல்.

6. புகைப்பிடிக்கும் பழக்கத்தை முற்றாக நிறுத்தல்.

7. மிதமிஞ்சிய மதுபான பாவனையை குறைத்தல்.

8. கிரமமான உடற்பயிற்சி செய்தல்.

9. மன அழுத்தத்தில் இருந்து விடுவிப்பதற்கான பயிற்சிகளை மேற்கொள்ளல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர். கலாநிதி பட்டப்பின் டிப்ளோமா பட்டம் பெற்ற போது



மட்/ கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலய ஆசிரியர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப வம்சாவழி

ஆறுமுகம்
+
மாணிக்கப்பிள்ளை

சிவசரணம்
மயில்வாகனம்
பொன்னுத்துரை
கிருபைமணி
கோபாலப்பிள்ளை
இராசதுரை
பரமேஸ்வரி
அருட்சோதி
வசந்தா
சிவசம்பு

முருகேசு
+
செல்லம்மா

ஞானம்மா
அழகம்மா
மனோன்மணி
நேசம்மா

**கலாநிதி**
+
சசிலேகா

வஜிதா
மதுசனன்

கருணாநிதி
+
விஜிதா

கிவாஞ்சன்

ரஜினி தேவி
+
ஜோதிநேசன்

சஸ்வீனா

ராதிகாதேவி
+



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவிலல்

எமது குடும்பத்தலைவராகவும், எங்கள் எல்லோரினதும் அன்புக்குரியவராகவும் வாழ்ந்து எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டுச் சென்ற எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும், மலர்வளையங்கள் மூலமும் அஞ்சலி செலுத்தியும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியும், இறுதிக்கிரியைகளின் போது அஞ்சலி செலுத்தியும், மற்றும் பலவழிகளிலும் உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வண்ணம்

" எந் நன்றி கொண்டார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய் நன்றி கொன்ற மகற்கு "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை நீ இழந்தாய்? எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்? அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ, அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.
"இதுவே உலக நியதியும், எனது படைப்பின் சாராம்சமுமாகும்"

-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

வணசிங்கா பிரிண்டர்ஸ், 126/1 திருமலை வீதி, மட்டக்களப்பு. தொ.இல. 065-2227170

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org